**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்</u>**

O.S.No.49/2024

வாதி தரப்பு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 25.08.205ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வா.சா.1– தியாகராஜன், த/பெ துரைசாமி</u>**

**<u>1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

<u>1.</u> 3ம் பிரதிவாதி விற்பனை செய்தததாக வா.சா.7 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.7 ஆவணத்தில் 3ம் பிரதிவாதி பெயர் தவிர விற்பனை செய்தததாக மற்ற பிரதிவாதிகளின் பெயர் உள்ளது என்றால் சரிதான். குடும்பத்தின் சார்பாகத்தான் குடும்பத் தேவைக்காக அனைவரும் இணைந்து சொத்தின் ஒரு பகுதியை விற்பனை செய்துள்ளார்கள் என்றால் குமாரின் தனிப்பட்ட முறையில் அவருக்கு பிரிந்த பாகத்தை விற்பனை செய்துள்ளார். பாகப்பிரிவினை எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

2. காசிராஜன் கிரையம் பெற்ற பத்திரத்தில் நான்கெல்லைகள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காசிராஜனிடம் இருந்து கிரையம் பெற்ற பத்திரத்திலும் நான்கெல்லைகள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்குரையில் குறிப்பிட்டுள்ள நான்கெல்லையை காட்டும் விதம் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்குரையில் குறிப்பிட்டுள்ள நான்கெல்லைக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான்.

3. காவல் நிலையத்தில் கொடுத்துள்ள புகார் கற்பனையானது என்றால் சரியல்ல. தாவா சொத்தை அபகரிக்க உள்நோக்கத்துடன் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் 12 செண்ட் நிலத்தை விற்பதற்கு தர்மராஜக்கு உரிமையும், தகுதியும் கிடையாது என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் கிரையம் பெற்ற காசிராஜனுக்கும், காசிராஜன் மூலம் கிரையம் பெற்ற எனக்கும் உரிமை கிடையாது என்றால் சரியல்ல. அதனால் நான் வாங்கிய கிரையம் செல்லத்தக்கதல் என்றால் சரியல்ல. வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
Date: 2025.08.26 14:08:12 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.